சுவாமியே சரணம் ஐயப்பா

November
2017



# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8. TEL : 416.321.6104

**சுவாமியே சரணம் ஐயப்பா**

## இது ஒரு மாத செய்தி இதழ்

### அருள் மிகு கனடா ஐயப்பன் இந்து ஆலயம் வழங்கும் இதழ் !

சுவாமியே சரணம் ஐயப்பா

கனடா மண்ணில் ஐயப்பனுடைய புகழும் பெருமையும் சிந்தையும் சிறப்புற்று ராஜ கோபுரத்துடன் கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் எனும் பெருமையுடன் வட அமெரிக்காவில் பெரிய ஆலயமாக திகழ்வதற்கு பல வழிகளிலும் உதவிய அன்பான ஐயப்பன் அடியார்கள மற்றும் கனடா வாழ் தமிழ் மக்களே வணக்கம்

கடந்த மாதம் நடந்த நிகழ்ச்சிகளும் திருவிழாக்களும் அனைத்தும் வெகு சிறப்பாக நடைபெற்றன. உபயகாரர்கள் பக்தர்கள் சிவாச்சாரியர்கள் அனைவரையும் கரம்கூப்பி நன்றியை தெரிவிப்பதுடன் மேலும் இனிவரும் ஆலய நிகழ்ச்சியில் அனைவரும் இனைந்து ஐயப்பனுடைய திருவருளையும் புகழையும் பெற்றுக்கொள்ளுமாறு அன்படன் வேண்டுகிறோம்.

**சுவாமியே சரணம் ஐயப்பா**
**ஆண்மீக சேவையில் உள்ள அறங்காவலர் சபையினர்.**

**காலை**

| | |
|---|---|
| கோவில் திறத்தல் | 7.00 A.M |
| நடைதிறத்தல் | 7.30 A.M |
| காலைச்சந்தி பூஜை | 8.30 A.M |
| பரிவார மூர்த்திகள் அபிஷேகம் | 9.00 A.M |
| ஐயப்பன் அபிஷேகம் | 10.00 A.M |
| உச்சிக்காலப்பூஜை | 11.00 A.M |
| நடை சாத்துதல் | 1.15 P.M |
| ஆலயம் மூடுதல் | 1.30 P.M |
| (வெள்ளி - செவ்வாய் | 2.00 P.M) |

**மாலை**

| | |
|---|---|
| கோவில் திறத்தல் | [redacted] |
| (வெள்ளி - செவ்வாய் | 5.00 P.M) |
| நடைதிறத்தல் | 6.15 P.M |
| அபிஷேகம் | 6.30 P.M |
| மாலைப்பூஜை | 7.30 P.M |
| ஹரிவராசனம் | 9.15 P.M |
| ஆலயம் மூடுதல் | 9.30 P.M |

சனி, ஞாயிறு ஆலயம் காலை 7.00 மணிமுதல் இரவு 9.30 மணி வரை திறந்திருக்கும்

**Temple will be openned on Satardays & Sundays from 7.00 A.M. to 9.30 P.M.**

விஷேட நாட்களில் அபிஷேகம், பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படும்

Canada Sri Ayyapan Hindu Temple (sri ayyappa samajam of Ontario)
(A Reg. Religious and Charitable Organization)
635 Middlefield road, Scarborough, on, M1V 5B8
Tel: 416-321-6104 fax 416- 321 -7558 web. www.ayyappan.com

**ஐயனை நாடுங்கள் அவன் புகழ்பாடுங்கள் என்றும் புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்.**

சுவாமியே சரணம் ஐயப்பா

## ஐப்பசி மாதம் சிறப்பிதழ்

23.10.2017 — திங்கட்கிழமை சதுர்த்தி விரதம், கணபதி ஹோமம், பஞ்சமுக அர்ச்சனை விநாயகர் புறப்பாடு, ஸ்கந்தஷஷ்டி விரதம் 4ம் நாள் காலை, மாலை ஸ்கந்தமஹாயாகம் - (4) நாள்.

24.10.2017 — செவ்வாய்க்கிழமை ஸ்கந்தஷஷ்டி விரதம் 5ம் நாள் காலை, மாலை ஸ்கந்த மஹாயாகம் - மாலை சப்பறத் திருவிழா.

25.10.2017 — புதன்கிழமை ஸ்கந்தஷஷ்டி விரதம் சூரன்போர, காலை, மாலை ஸ்கந்தமஹாயாகம் காலை 11:00 மணிக்கு தேர்த்திருவிழா, மாலை 7:00 மணிக்கு சூரன்போர்.

27.10.2017 — வெள்ளிக்கிழமை 2வது ஐப்பசி வெள்ளி, காலை 4:00 மணிக்கு பாரணை தீர்த்தம், யாககும்ப அபிஷேகம், மாலை முருகன் திருக்கல்யாணம்.

30.10.2017 — திங்கட்கிழமை உத்தான ஏகாதசி விரதம் விஷேட அபிஷேக பூசை விஷ்ணு புறப்பாடு, சத்திய நாராயணர் பூசை.

### முத்ரமாலை கழற்றும் மந்திரம்.

அபூர்வமசலாரோஹ திவ்யதர்ச'ன காரணம்
சா'ஸ்த்ரு முத்ராத் மகாதேவ தேஹிமே விரதவிமோசனம்

கழற்றிய முத்ரமாலையை இருமுடிமேல் அல்லது இறைவன் மேல் வைத்து கடவுளுக்கும் மூத்தோருக்கும் குறிப்பாக அப்பா அம்மாவுக்கு வணக்கம் தெரிவிக்க வேண்டும். பின்னர் சபரிமலையிலிருந்து கொண்டு வந்த பிரசாதத்தை மற்றவர்களுக்கு வினியோகிக்கலாம்.

மாலையைக் கழற்றிய பின் ஐய்யப்ப பக்தர்கள் விரதத்திற்கு முன்பிருந்த தமது வழமையான வாழ்க்கையை பின்பற்றலாம். விரதத்தை முடித்துக் கொண்டால் கூட விரத காலத்தில் நடந்து கொண்டது போன்ற நெறிமுறைகளை பக்தர்கள் இயன்ற அளவு அதன் பின்னரும் கூட கடைப்பிடித்தல் நன்மை தரும்.



# November 2017 கார்த்திகை

| | |
|---|---|
| 01-11-2017 | புதன் கிழமை, பிரதோஷ விரதம். விஷேட அபிஷேகம், பூசை, சிவன் பார்வதி புறப்பாடு. |
| 03-11-2017 | வெள்ளிக் கிழமை, பூரணை விரதம். சத்திய நாரயணா பூசை, 3வது ஐப்பசி வெள்ளி. |
| 04-11-2017 | சனிக்கிழமை, ஐப்பசிப் பரணி, கார்த்திகை விரதம். விஷேட அபிஷேகம். பூசை, (முருகன்). |
| 07-11-2017 | செவ்வாய்க் கிழமை, சங்கடஹார சதுர்த்தி, பிள்ளையார் விரதம். விஷேட அபிஷேகம், பூசை. |
| 10-11-2017 | வெள்ளிக் கிழமை, 4வது ஐப்பசி வெள்ளி. |
| 13-11-2017 | திங்கட்கிழமை, ஏகாதசி விரதம். ஐயப்பன் உத்திர பூசை, விஷேட அபிசேகம், பூசை, ஐயப்பன் புறப்பாடு. |
| 15-11-2017 | புதன்கிழமை, பிரதோஷ விரதம். விஷேட அபிஷேகம். பூசை, சிவன் பார்வதி புறப்பாடு. |
| 16-11-2017 | வியாழக்கிழமை, ஐயப்பன் மண்டல பூசை ஆரம்பம். |
| 17-11-2017 | வெள்ளிக்கிழமை, அமாவாசை விரதம். 2ம் நாள் மண்டலபூசை. |
| 18-11-2017 | சனிக்கிழமை, 3ம் நாள் மண்டலபூசை. |
| 19-11-2017 | ஞாயிற்றுக்கிழமை, 4ம் நாள் மண்டலபூசை. |
| 20-11-2017 | திங்கட்கிழமை, 1வது சோமவாரம். 5ம் நாள் மண்டலபூசை. |
| 21-11-2017 | செவ்வாய்க்கிழமை, 6ம் நாள் மண்டலபூசை. |
| 22-11-2017 | புதன்கிழமை, சதுர்த்தி விரதம், கணபதி ஹோமம். பஞ்சமுக அர்ச்சனை, 7ம் நாள் மண்டலபூசை. |
| 23-11-2017 | வியாழக்கிழமை, 8ம் நாள் மண்டலபூசை. |
| 24-11-2017 | வெள்ளிக்கிழமை. ஷஷ்டி விரதம். 9ம் மண்டலபூசை. |
| 25-11-2017 | சனிக்கிழமை, 10ம் நாள் மண்டலபூசை. |
| 26-11-2017 | ஞாயிற்றுக்கிழமை, 11ம் நாள் மண்டலபூசை. |
| 27-11-2017 | திங்கட்கிழமை, 2வது சோமவாரம். 12ம் நாள் மண்டலபூசை. |
| 28-11-2017 | செவ்வாய்க்கிழமை, 13ம் நாள் மண்டலபூசை. |
| 29-11-2017 | புதன்கிழமை, ஏகாதசி விரதம். விஷேட அபிஷேகம், பூசை, விஸ்ணு புறப்பாடு, சத்திய நாராயணா பூசை, 14ம் நாள் மண்டலபூசை. |
| 30-11-2017 | வியாழக்கிழமை, பிரதோஷ விரதம், விஷேட அபிஷேகம், பூசை, சிவன் பார்வதி புறப்பாடு, 15ம் நாள் மண்டலபூசை. |

சுவாமியே சரணம் ஐயப்பா

## அன்னதானத்தின் மகிமை

தானத்தில சிறந்தது அன்னதானம். கோடி செம்பொன்னைக் கொட்டிக் கொடுப்பதிலும் நாடி ஓருவருக்கு நல்விருந்து படைப்பதுதான் உயர்ந்தது என்று பொரியோர்கள் கூறியுள்ளார்கள்.

ஐயப்பமார்கள் விரதம் இருக்கும் போது கைக்கொள்ள வேண்டிய முக்கியமான செயல்களுள் ஒன்று அன்னதானம் வழங்குதல்.

செல்வம் மிகுந்த ஒருவர் ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்கிறார். செல்வம் குறைந்தவர் நான்கு பேருக்கு அன்னதானம் செய்கிறார் என்பதில் சிறப்பில்லை. எந்த நிலையில் என்ன காரணத்திற்காகச் செய்கிறோம் என்பதில்தான் பெருமை உயர்வும் மனநிறைவும் இருக்கின்றன.

யாருக்கும் கட்டாயப்படுத்தாமல் உதவும் பணி ஒருவருக்கு ஏற்பட்டு விட்டால் விரதம் முடிந்த பிறகும் அந்த நற்பண்பு அவரை விட்டு எப்பொழுதும் அகலாது.

இறைசேவையிலுள்ள அறங்காவலர் சபையினர்.







**மகர மண்டல விரத விஞ்ஞாபனம் ( ஸ்ரீ ஐயப்பன் விரதம் )**

**புனிதமான மாலை அணியும் வைபவம் 16 – 11 – 2017 வியழக்கிழமை.**

**புனித சபரிமலை யாத்திரை ஆரம்பம் 29 – 12 – 2017 வெள்ளிக்கிழமை.**

**மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

# சபரிமலை யாத்திரையின் மகிமை

சபரிமலை யாத்திரையின் போது ஐயப்பன் அடியார்கள் கறுப்பு உடை நீல உடை தரித்து சாதி, மதம், ஏழை, செல்வந்தர் பேதமின்றிச் சரணம் சொல்லும் போது எல்லோரும் ஓர் நிலை என்ற உயர்ந்த உணர்வு உண்டகிறது. இந்துக்கள் மட்டும் அன்றி முஸ்ஸீம்களிடையே நல்லுறவு உண்டாவதோடு ஒருமைப்பாடு என்ற உணர்வு ஏற்படுவதையும் கண்கூடாகக் காணக்கூடியாதாக உள்ளது.

யாத்திரையின் போது மாலை அணிந்து மனதை ஒருவழிப்படுத்தி கடும் விரதமிருந்து ஐயப்பனை மெய்யன்போடு வழிபடும்போது மனதிலே திருப்தியும் சாந்தமான எண்ண அலைகள் தோன்றுகின்றது. யாத்திரை செல்லும்போது பல ஆறுகளிலும் அருவிகளிலும் மலைகளிலும் இருந்து வரும் நீருற்றுகளிலும் நீராட சர்ந்தப்பம் கிடைப்பதால் பலவித மூலிகைகளின் குணங்களைப் பெற்ற நீரினால் உடம்பிலுள்ள பலவித நோய்கள் குணமாகின்றன. மலைவழியில் செல்லும் போது வீசும் தென்றல் காற்றும் தெளிந்த நீரோடையாக ஓடிவரும் சுனைநீர் ஏராளமான மூலிகை மருந்துகளைக் தொட்டுத் தழுவிப்பாயந்து வருவதால் அந்நீரை அருந்துவதால் சில தீராதநோய் நீங்கப்பெறுகின்றது. பல உயர்ந்த மலைகளில் ஏற சந்தர்ப்பம் கிடைப்பதால் இதயமும் நரம்புகளும் தசைகளும் உறுதி பெறுகின்றன. உடல் தைரியமடைகின்றது. பிறவி ஊமைகளும் பேச வாய்ப்பு உண்டாகின்றது. கெட்ட உணர்வுகள் அற்றுப் போகின்றது.

மெய்யன்புடன் பதினெட்டு வருடங்கள் முறையாக பதினெட்டுப் படிகளையும் கடந்து ஐயப்பன் தரிசனம் பெறுபவர்களுக்கு மறுபிறப்பு ஏற்படுவதில்லை அவர்களுக்கு முத்தி கிடைக்கிறது. ஆகவே ஐயப்பனை உள் அன்புடனும் துர்ய்மையுடனும் வழிபட்டு மனதை ஒருவழிப்படுத்தி விரதம்அனுஷ்டித்து சபரிமலை யாத்திரை செய்து உடல் ஆரோக்கியத்தையும் உள ஆரோக்கியத்தையும் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ்வோமாக.





## 29 – 12 – 2017 சபரிமலை புனித யாத்திரை ஆரம்பம்

ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் முதல் திகதியன்று உலகில் வாழும் மக்களின் செவிகளில் சுவாமியே சரணம் ஐயப்பா என்ற திருநாமம் ஒலிக்க ஆரம்பித்து விடுவதை நாம் எல்வோரும் அறிவோம் அன்றைய தினமே ஸ்ரீ ஐயப்பன் அடியார்கள் துளசிமாலை அணிந்து 41 நாட்கள் தொடர்ந்து விரதமிருந்து சபரிமலைக்கு செல்வதைக் காணலாம். கனடாவிலிருந்தும் பல ஐயப்பன் அடியார்கள் ஆண்டுதோறும் இந்தியாவுக்குக் சென்று சபரிமலைக்கு இருமுடி சுமந்து காடுமலை கடந்து ஸ்ரீ ஐயப்ப சுவாமியை தரிசித்து வருகிறார்கள் அவ்விதம் செல்லும் அடியார்களின் நலன் கருதி சபரிமலைக்கு புனித யாத்திரையை மேற்கொள்ள கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய யாத்திரை குழுவினர் சென்ற காலங்களைப் போல இவ்வாண்டும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்ய முன்வந்துள்ளனர். கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய யாத்திரைக் குழுவிற் சேர்ந்து புனித யாத்திரை செய்ய விரும்புவோர் 30 – 11 – 2017 க்கு முன்னர் தங்களின் பெயர்களை ஆலயக் காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்

## நினைத்ததை நிறைவேற்றி கொடுக்கும் ஸ்ரீ தர்ம சாஸ்தா மணி வழிபாடு

## மணியின் மகத்துவம் அல்லது தத்துவம்

மணியிலிருந்து வெளிப்படும் மங்கல ஒலி ஓம் எனும் பிரணவத்தின் ஒலியாகும்

சகல தேவதைகளிடமும் தெய்வங்களிடமும் நமது வேண்டுதல்களை மனமார ஏற்றுக் கொள்ளவும் தீயசக்திகளை விரட்டி அடிக்கவும் நமது வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்ளவும் கடவுள் முன் மணிலியிருந்து நாம் ஒலியை எழுப்புகிறோம்

மணியின் ஒலியானது நமது உடலில் உள்ள ஏழு சக்கரங்களை (மூலாதாரம் சுவாதிடானம் மணிபூரகம் அனாஹுதம் விசுத்தி ஆக்மா சகஸ்ரஹாரம்) தொடும் வல்லமை பொருந்தியவை மேலும் நமது மூளையின் வலஇடப்புற பகுதிகளை ஒருநிலைப்படுத்துகிறது

மணியின் உடல் பகுதி ஆனந்தத்தையும் அதன் நாக்கு சரஸ்வதி தேவியையும் குறிக்கிறது.

மணியை அடித்தவுடன் ஒலி உண்டாக்கி சிறிது நொடிகளில் மறைந்து நித்தியதுவத்தை அடைந்துவிடுகிறது.



# மாலை அணிந்த ஒரு பக்தர் செய்ய வேண்டியவையும் செய்யக் கூடாதவையும்.

ஐயப்ப பக்தர் தினசரி காலையும் மாலையும்.ஃ.இரவிலும் கண்டிப்பாகக் குளிக்க வேண்டும். தினசரி அவர் ஐயப்பன் பூஜை செய்ய வேண்டும். உண்மையிலேயே ஒரு பக்தர் களைப்பாக இருந்தாலோ அல்லது வெகு நேரம் கழித்துத் தன் இருப்பிடம் திரும்ப நேரிட்டாலோ குளிக்க முடியாவிட்டாலும் கை, கால், முகம் அலம்பி குறைந்த பட்சம் பதினோரு ஐயப்பன் சரணங்களையாவது சொல்லி பூஜை செய்ய வேண்டும்.

ஐயப்ப பக்தர்கள் முக்கியமாக பிரமச்சரிய விரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். திருமணமானவரைவிட மலைக்கு எளிதாகச் சென்றுவரத் தேவைப்படும் உடம்பு மற்றும் மன வலிமை ஒரு பிரம்மச்சரிக்கே கிடைக்கிறது என்பதால் தான் இந்த விதி. அவர் பார்க்கக் கூடிய அனைத்துமே கடவுள் உருவாக்கியவை என்பதை உணர வேண்டும். இன்னொரு ஐயப்ப பக்தரை அவர் சந்திக்க நேரும்போது “சாமி சரணம்” அல்லது “ஐயப்ப சரணம்” என்று வார்த்தைகளைக் கூற வேண்டும். விரத காலத்தில் அவர் முடி வெட்டிக் கொள்ளவோ, முகச்சவரம் செய்து கொள்ளவோ, நகம் வெட்டிக் கொள்ளவோ கூடாது. அவர் தீட்சை நிலையில் இருக்க வேண்டும். கண்டிப்பாக யாருடனும் கோபப்படக் கூடாது. யாருக்கும் எந்தவிதமான தீங்கும் செய்யக் கூடாது. உணவைப் பொறுத்தமட்டில் சிலர் காலையில் சிற்றுண்டி, மதியம் சாப்பாடு, இரவில் சிற்றுண்டி உட்கொள்ளலாமென்று சொல்வர். இது முழுவதும் சரியல்ல. இரவில் கூட உணவு உட்கொள்ளலாம். ஆனால் மற்றக் காலங்களில் சாப்பிடுவது போல முழு வயிற்றுக்கும் சாப்பிடக் கூடாது என்பது தான் முக்கியம்.அதனால் தான் சிலர் சிற்றுண்டி சாப்பிடுகிறார்கள். வெற்றிலை போடுதல், புகை பிடித்தல், பொடி போடுதல் போன்றவற்றைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். பொதுவாக ஐயப்ப பக்தர்கள் எவ்விதக் கெட்ட பழக்கங்களையும் இக்காலத்தில் மேற்கொள்ளக் கூடாது.

பக்தர்கள் கறுப்பு.ஃ.நீலம் அல்லது காவி வேஷ்டி புடவைகளையே அணிய வேண்டும். அப்படி ஆடையணியும் பக்தர்கள் செருப்பு அணியக் கூடாது. சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும்போது கல்லிலும் முள்ளிலும் வெயிலிலும் வெறுங்காலோடு எளிதாக நடந்து செல்லத் தங்கள் கால்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்காகவே விரத காலத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே செருப்பு அணியாமல் நடந்து பழக வேண்டும் என்ற விதியை வைத்துள்ளனர். அதே போல் பயணத்தின் போது காட்டுப் பகுதிகளில் வெறும் தரையில் படுக்க வேண்டி வருமாதலால் விரத காலத்தில் தலையணையின்றிப் படுத்துத் தூங்க வேண்டும் என்று வைத்துள்ளனர். மதிய காலத்தில் தூங்குவதைத் தவிர்க்க வேண்டும். அப்படித் தூங்க நேரிட்டால் எழுந்த பின் குளித்த பிறகே உணவருந்தவோ பானங்கள் அருந்தவோ செய்ய வேண்டும். மரணச்சடங்குகளில் கலந்து கொள்ளக் கூடாது.

முக்கியமாக ஐயப்ப பக்தர்கள் ஏழைகளுக்கு முடிந்தளவு தானங்கள் வழங்க வேண்டும். ஐயப்பன் அன்னதான பிரபு என்பதால் மற்றவர்களுக்கு அன்னம் (உணவு) வழங்குதல் மிக முக்கியமான ஒன்றாகும். அன்னதானத்தின் மகிமை பற்றிக் கீழ்க்கண்ட சுலோகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**சுவாமியே சரணம் ஐயப்பா**

**"கஜதுரக ஹைஸ்ரம் கோகுலம் கோடி தானம்**
**கனக ரஜத பாத்ரம் மேதினி ஸாகராந்தம்**
**உபயகுல விசு'த்தம கோடி கன்யாப்ரதானம்**
**நஹிநஹி பஹூதானம் அன்னதானம் ஸமானம்"**

(கேரளத்திலுள்ள வைக்கத்தப்பன் கோயிலில் எழுதப்பட்டுள்ளது,)

(ஆயிரம் யானைகள், ஆயிரம் குதிரைகள், கோடி பசுக்கள் வெள்ளி, தங்கப் பாத்திரங்கள், கடல் முடியும் வரை உள்ள பரந்த பகுதிகள் மற்றும் இரு குலத்தாரும் சேர்ந்து ஒரு கன்னிகா தானத்துக்கு செய்யும் செலவு இவையாவும் ஒரு அன்னதானத்துக்கு ஈடாகாது.)

மனதுக்கு அமைதியளிக்கும் ஐயப்ப பூஜைகளில் முடிந்த அளவு அவர்கள் கலந்து கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் மனது தடுமாறி மற்றவர்களிடம் தங்கள் உணர்ச்சிகளைக் கொட்டிவிடக் கூடாது. சபரிமலைக்குப் புறப்பட முன், தனது சக்திக்கேற்ப சிறிய அளவிலாவது தனது இல்லத்தில் ஐயப்ப பூஜை மேற்கொள்வது மிகவும் சிறப்பானதாகும். அது முடியாவிட்டால் கூட ஒரு சில ஏழைகளுக்கு உணவளிக்கவோ அல்லது அவர்களுக்குத் தேவைப்படும் வேறு ஏதாவது பொருட்களைக் கொடுக்கவோ செய்யலாம். குளித்து பூஜை செய்த பின்தினமும் ஒரு தடவையாவது அருகிலுள்ள ஐயப்பன் ஆலயத்துக்கோ வேறு ஏதாவது ஆலயத்துக்கோ சென்று வழிபாடு செய்து வர வேண்டும்.

ஒரு மண்டலம் என்பது 48 நாட்களாகும். 48 நாட்கள் விரதம் முடித்த பின்னர் குருசாமியின் ஆலோசனைப்படி ஐயப்ப பக்தர்கள் சபரிமலை புறப்படலாம். குருசாமியிடமோ அல்லது வேறு யாரிடமோ பயணத்துக்காகப் பணம் கொடுத்திருந்தால் கூட போதிய அளவு பணத்தை அவர்களும் எடுத்துச் செல்வது நலம். ஒவ்வொரு ஐயப்ப பக்தரும் குருசாமியினால் கட்டப்பட்ட இருமுடியை தலையில் அல்லது தோளில் சுமந்து செல்ல வேண்டும். இருமுடியில் முன்பகுதி பரமாத்மாவிற்கும் (சபரிமலைத் தெய்வங்களுக்காக) பின்பகுதி ஜீவாத்மாவிற்கும் (பக்தனுக்காக) வேண்டிய பொருட்களை எடுத்துச் செல்லப் பயன்படுகிறது. முன்பகுதியில் அரிசி, காணிப்பொன், முத்திரைத் தேங்காய் மற்றும் ஐயப்பனுக்கான நைவேத்யப் பொருட்கள், அபிஷேகப் பொருட்கள் வைக்க வேண்டும். பின் பகுதியில் மஞ்சமாதாவிற்காக மஞ்சள், குங்குமம், தேங்காய், ரவிக்கைத் துணி வைக்க வேண்டும்.

நெய்த்தேங்காய் நிரப்பும்போது தேங்காயில் நெய் நிரம்பியவுடன் தேங்காய்க் கண்ணை ஒரு அடைப்பானால் (கார்க்) அடைத்து, அதன் மேல் விபூதி தெளித்து ஊறிய அப்பளத்தை வைத்து முத்திரையிட்டு அதன் மேல் துணியை வைத்து விபூதி சந்தனம், குங்குமம் வைத்து, இறைவனை வேண்டி, அதற்குரிய பையில் வைத்து இருமுடிக்கட்டு போடுவது வழக்கத்திலுள்ளது.



பயணம் மேற்கொள்ளும் முன் தனது வீட்டு வாசலுக்கு முன் ஒரு தேங்காய் உடைக்க வேண்டும். இருமுடிசாமியின் வீட்டில் அல்லது ஆலயங்களில் வைத்து கட்டப்படும் போதுகூட கட்டுக்குப் புறப்படும் முன் தேங்காய் உடைப்பது சிறந்தது.

குழுக்களாகப் பயணம் செய்யும்போது அவ்வப்போது குழுக்களின் இருப்பிடங்களைத் தவறவிடாமலிருக்கும் பொருட்டு ஒவ்வொரு பக்தரையும் கண்காணித்து வருதல் மிகவும் அவசியம். தம்மைச் சார்ந்த பக்தரனைவரும் தம்முடன் வருகிறார்களா என்று கவனித்துக் கொள்ள வேண்டும்.

தரிசனம் முடித்து வீடு திரும்பியதும் சபரிமலைக்குப் புறப்படும் போது செய்தது போலவே தங்கள் வீட்டு வாசல் முன் ஒரு தேங்காயை உடைக்க வேண்டும். வீட்டிற்குள் இருக்கும் பூஜை அறைக்குச் சென்று இருமுடிப்பிரசாதங்களை ஒரு பலகையின் மீது அல்லது சபரிமலைக்குக் கொண்டு போன போர்வையின் மீது வைக்க வேண்டும். பின் குளித்து பூஜை செய்து இறைவனுக்கும் இருமுடிக்கும் கற்பூரம் ஏற்றிக் காண்பிக்க வேண்டும். மாலையை வந்து சேர்ந்த அன்றே கழற்றுவது உத்தமம். அது இரவாக இருந்தால் அடுத்த நாள் உத்தமம்.





## மணிகண்டனும் மணி வழிபாடும்

பிரணவ ஸ்வருபமான மணியினை பிறக்கும்போதே கண்டத்தில் (கழுத்தில்) தரித்து "மணிகண்டன்" என்ற திருநாமத்துடன் தர்ம சாஸ்தா என்னும் ஐயப்பன் அவதரித்தார். நாம் மனம் உருகி பக்தியுடன் ஐய்யனை வேண்டினால் நமது இதயத்திதல் அருள்பாலித்து நமது எண்ணங்களை நிறைவேற்றுவார்.

## மணிவழிபாடு

ஆலய அலுவலகத்தில் கட்டணத்தை செலுத்தி சிறப்பு மணி மற்றும் சீட்டு வாங்கவும்

தங்கள் பெயர் ராசி நட்சத்திரம் மற்றும் அவசியமான ஒரு விருப்பம் எழுதி சிவாச்சாரியாரிடம் கொடுக்கவும்.
குருக்கள் அர்ச்சனை செய்து கொடுத்தவுடன் ஐயப்பனை மூன்று முறை பிரதாணம் செய்து அந்த மணி மற்றும் சீட்டினை பக்தியுடன் சன்னதியின் பின் புறம் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டவும்.






சுவாமியே சரணம் ஐயப்பா
கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்